## இனிமையான குழந்தைகளே! எந்த காரணத்தினாலும் குலத்திற்கு களங்கம் ஏற்படுத்தி விட வேண்டாம். பூமியே பிளந்தாலும் தர்மத்தை விட வேண்டாம், (எவ்வித சூழ்நிலையிலும் தாரணையில் நிலைத்திருக்க வேண்டும்) தந்தைக்கு கொடுத்த வாக்கு சதா நினைவிருக்கட்டும்

கேள்வி: குழந்தைகளுக்கு ஒவ்வொரு அடியிலும் எந்த ஒரு எச்சரிக்கை அவசியம் இருக்க வேண்டும்?

பதில்: ஈஸ்வரனுக்கு முன்னால் உறுதி எடுத்துள்ளீர்கள், வாக்குறுதி மற்றும் உறுதிமொழி செய்துள்ளீர்கள், அதனை எந்த சூழ்நிலையிலும் காப்பாற்ற வேண்டும். இதில் எச்சரிக்கை யாக இருப்பது மிக அவசியம். தந்தையின் குழந்தையான பிறகு ஒருபோதும் இழிவானவராகி தவறான செயல் செய்து விடக்கூடாது. அப்படி தவறான கர்மம் செய்து விட்டால் தர்மராஜ் முழுக்க முழுக்க கணக்கை வாங்கி விடுவார். தன் மன வழி மற்றும் பிற வழியில் நடக்க வேண்டாம், ஒவ்வொரு அடியிலும் ஸ்ரீமத் நினைவிருக்கட்டும்.

பாடல்: நீங்கள் தான் தாயும், தந்தையும்......

ஓம் சாந்தி. சிவபகவான் வாக்கு, தனது சாலிகிராம் குழந்தைகளுக்காக. சாலிகிராம் என்று ஆத்மாவை சொல்லப்படுகிறது. நமது பரம்பிதா பரமாத்மா, அவரது பெயர் நிராகார் சிவன் தான் என்பதை குழந்தைகள் தெரிந்துள்ளனர். வியாபார மக்கள் ஒரு புள்ளியை சிவன் என சொல்வார் கள். பாபா புரிய வைக்கின்றார் ஆத்மாவும் புள்ளி (பிந்து) தான். அது புருவ மத்தியில் உள்ளது. மின்னுகின்ற பிரகாசமான நட்சத்திரம். இது ஆத்மாவின் விசயம். இதனை முதலில் உறுதி செய்துக் கொள்ள வேண்டும். அதே மாதிரி நமது நிராகார தந்தை சிவன் நமக்கு கற்பிக்கின்றார். நமது தந்தை சிவன், உள்ளிருப்பது ஆத்மா. ருத்திரன் என்று சொன்னாலும் நிராகார் தான், பெயர் மட்டும் வேறு, பொருள் ஒன்று தான். அவர் தான் பரமபிதா பரம் ஆத்மா. வெகு தொலைவில் இருப்பவர் மனித சிருஷ்டியின் விதை ரூபம். சர்வ ஆத்மாக்களின் தந்தை. இப்படி நிராகார ஆத்மா பேசுகிறது சாகார உடல் மூலமாக. குழந்தைகளாகிய நீங்கள் முன்பாக அமர்ந்திருக்கும் பொழுது சிவபாபாவே நமக்கு கற்பிக்கிறார் என்ற போதை ஏறுகிறது. தந்தைக்கு தனக்கென்று தேகம் இல்லை, மற்ற ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அவரவர் உடலுக்கென தனித்தனியான பெயர் உள்ளது. பரமாத்மாவிற்கு ஒரே ஒரு பெயர் தான். எனவே பாபா புரிய வைக்கின்றார் நான் நிராகார் சிவன். நான் குழந்தைகளாகிய உங்களைப் போல மனித சிருஷ்டியில் உடல் எடுத்து மறு பிறவியில் வருவதில்லை. நீங்கள் அனைவரும் சாகாரிகள் (தேகம் உடையவர் கள்), நான் சாகாரியாக இப்போது மட்டுமே உடலில் வருகின்றேன். இப்போது மட்டுமே பிரவேசித்து கற்பிக்கின்றேன். இவருடைய ஆத்மாவும், உங்களுடைய ஆத்மாவும் கேட்கிறது. இதனை நன்கு தாரணை செய்தால் பாபாவிடம் அன்பு இருக்கும். ஆனால் அந்த அளவிற்கு இன்னும் அன்பு வரவில்லை என்று அனைவர் முகமும் சொல்கிறது. பாபா சொல்கிறார் முகம் மலர்ந்து விடவேண்டும். ஒரு கன்னிப்பெண் தன் கணவனை சந்திக்கும்பொழுதும், ஆபரணங்கள் அணியும் பொழுதும் முகம் மலர்வதைப் போன்று, குழந்தைகளாகிய உங்களுக்கு ஞான அலங்காரம் செய்யப்படுகிறது. எனவே குஷியின் அளவு அதிகரிக்க வேண்டும். பாபா உங்களை எந்த ஒரு சாகார

ரூபத்திலும் சிக்கிக் கொள்ள வைக்கவில்லை. மற்ற எல்லோரும் தேக அபிமானிகள். தனது சாகார உடல் மீதும் சிக்க வைத்துக் கொண்டே யிருக்கின்றார்கள். இங்கே பாபா சொல்கிறார் நிராகாரமான என்னை நினைவு செய்யுங்கள் எனது செல்லமான குழந்தைகளே, ஏ! ஆத்மாக்களே, நான் பரமாத்மா இந்த பிரம்மா உடல் மூலமாக குழந்தை களுக்கு ஞானம் கற்பிக்கின்றேன். இல்லையெனில் எப்படி கற்பிப்பேன். தூய்மை செய்வதற்காக அவசியம் உடல் தேவைப்படுகிறது. இது டிராமாவில் நிச்சயிக்கபட்டது. உடலில்லாமல் நான் வரமுடியாது. ஆத்மா பேசுகிறது, செய்தியைச் சொல்கிறது. அதுவும் நாடகப் படிதான். டிராமாவில் இருந்தது என்னவோ அது சொல்லப் பட்டது. அதனை பித்ரு என்று சொல்லப்படும். ஆத்மாவை பித்ரு என்று சொல்லப்படும். அது தான் ஒரு தேகம் விடுத்து மறு தேகம் எடுக் கிறது. இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்துள்ளீர் கள் பாபா ஞானக்கடல், தண்ணீர் கடல் பற்றிய விஷயமேயில்லை.

மனிதர்களே தேக அபிமானத்தில் வந்து, வந்து எவ்வளவு கருப்பாகி விட்டார்கள். இப்பொழுது மீண்டும் நீங்கள் ஆத்மா அபிமானியாகி வெண்மையாக ஆகின்றீர்கள். ஆத்மா தூய்மை அடைந்து கொண்டே செல்கிறது. எவ்வளவு நீங்கள் பாபாவை நினைவு செய்வீர்களோ அவ்வளவு இந்த நினைவின் தொடர்பால் உங்களது விகர்மங்கள் விநாசமாகும். பாவம் அழியும். உங்களுக்குத் தெரியும் மம்மா, பாபா எவ்வளவு முயற்சி செய்திருப்பார்கள் இருப்பினும் கர்ம வினையை முடிக்க வேண்டியிருந்தது. ஆக கடைசியில் வரிசைக்கிரமமாக கணக்கு வழக்கு முடிவடையும். குழந்தைகளுக்கு ருத்ர மாலையைப் பற்றித் தெரியும். 8 மணி மாலை, 108 மணி மாலை, 16108 மாலையும் உள்ளளது. பிரஜைகள் எண்ணற்றவர்கள். அது ருத்ர மாலை தானே. முழு உலகிலுள்ள அனைத்து ஆத்மாக்களும் ருத்ர மாலையில் தான். அனைவரும் பாபாவின் குழந்தைகள். முழு பரம்பரை ஆகிறது. மனிதர்கள் மிகவும் பெரிய (பரம்பரை) தலைமுறையை வைத்து பிறகு அதற்கு சர்நேம் (பெயர்) வைக்கிறார்கள். நீங்கள் தன்னை ஆத்மா என உணர்ந்து தந்தையை நினைவு செய்தால் உங்களது விகர்மம் அழிந்து விடும். இல்லையெனில் மிகவும் அதிகமான தண்டனையை அடைய நேரிடும்.

பாபா அடிக்கடி சொல்கிறார்: குழந்தைளே! மறக்க வேண்டாம். ஆனால் மாயை மீண்டும் மீண்டும் மறக்கச் செய்கிறது. பாபா சொல்கிறார்: எவ்வளவு நேரம் பாபா நினைவில் இருந்தோம் என்று தாங்களே அட்டவணை வைக்கவும். ஒரு நிமிடம், அரை நிமிடம் நினைவு செய்ய ஆரம்பித்தால் பிறகு பழக்கம் அதிகரித்துக் கொண்டேயிருக்கும். இறுதியில் பாபா நினைவு வருமளவிற்கு தனது மனோநிலையை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அப்படி நினைவில் இருப் பவர்கள் தான் விஜயமாலையின், 8 ரத்தினமாகின்றனர். முயற்சி செய்ய வேண்டும். யார் எவ்வளவு செய்வாரோ அவ்வளவு அடைவார்கள். சந்நியாசிகளோ வீடு வாசலை விட்டு செல் கிறார்கள். பிறகு மாளிகையில் வந்து அமர்ந்து கொள்கிறார்கள். உண்மையில் இது சட்டமல்ல. உங்களுக்கோ அங்கு அளவிலா சுகம் கிடைக்கின்றது. பாபா அரவணைத்து அன்புக் கொடுத்து சொல்கிறார் இனிமையான குழந்தைகளே! நீங்கள் எதிர் காலத்தில் செல்வந்தருக் கெல்லாம் செல்வந்தர் ஆக விரும்பினால் அதற்கேற்ப முயற்சி செய்யுங்கள். மாறாக இங்குள்ள செல்வம் யாவும் மண்ணோடு மண்ணாகும். ஆங்காங்கே விபத்து

மூலம் தீ பிடிக்கும், அனைவரு டையதும் சாம்பலாகும். விமானம் கீழே விழுந்தால் திருடர்கள் கொள்ளையடித்துக் செல்கிறார் கள். இப்பொழுது இந்த அணுகுண்டு முதலானவை எல்லாம் தயாராகியுள்ளது. இதனால் அனேகம் பேர் இறந்து போவார்கள். இப்போதுள்ள இந்த விசயங்கள் பின்னால் பாடப்படுகிறது. இருக்கின்ற லட்சாதிபதிகளெல்லாம் அழிந்து விடுவார்கள். அமெரிக்கா எவ்வளவு செல்வம் நிறைந்த நாடாக உள்ளது. இந்த மரண உலகத்தில் அமெரிக்கா சொர்க்கம்போல் உள்ளது. ஆனால் இவையாவும் கானல் நீராகும். இதை நீங்கள் தெரிந்துள்ளீர்கள். அதை உருவாக்கு பவர்களும் நிச்சயமாக மரணம் எதிரே உள்ளது என்பதை புரிந்துள்ளார்கள். கண்டிப்பாக பகவானும் இங்கேயிருப்பவர் அல்லவா! பரமபிதா பரமாத்மா வருவதே ஸ்தாபனை மற்றும் வினாசம் செய்வதற்காகத்தான். செய்பவர் செய்ய வைப்பவர் அல்லவா! இப்பொழுது நீங்கள் அமர்ந்துள்ளீர்கள் - குழந்தைகள் தான் பிராமணர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். நீங்கள் தாத்தாவிடமிருந்து ஆஸ்தி பெறுகிறீர்கள். ஸ்ரீமத் உயர்வாகப் பாடப்பட்டுள்ளது. எனவே அதன் படி நடந்து கொள்ள வேண்டும். தேவதையாக வேண்டும். பாபா சொல்கிறார் இந்த சமயத்தில் ஒவ்வொருவரும் துரியோதனனும், திரௌபதியும் தான். ஒரு கதையில் உள்ளது. திரௌபதி ஒரு வீட்டில் இருந்தபொழுது இழிவானவன் அவளை பின் தொடர்ந்தான் என்று. உண்மையில் அனைவருமே திரௌபதிகள் தான். குமாரி, தாய்மார்கள் அனைவரும் திரௌபதிகள் தான். கன்னியர்கள் சேவைக்குச் செல்கிறார்கள், பின்னாலே இழிவானவன் செல்கிறான். பிறகு பீமன் அந்த இழிவானவனை கொலை செய்ததாக எழுதப்பட்டுள்ளது. இழிவானவன் என்றால் முற்றிலும் மோசமானவன், பின்னாலே சுற்றுபவன். அப்படிப்பட்ட திரௌபதிகளை பாபா வந்து மானபங்கம் ஏற்படுத்துவதிலிருந்து காப்பாற்றுகிறார். கன்னியர் கள் தன்னை கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். இழிவானவன் என்பதெல்லாம் இங்குள்ள விசயம் தான். அவனிட மிருந்து தன்னை மிகவும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அப்படி ஒருவர் பாபாவிடம் வந்த பிறகு இழிவான வரானால் தர்மராஜ் அவனை என்ன செய்வாரென்று தெரியாது. அவர் இந்த குழந்தை களுக்கெல்லாம் சாட்சாத்காரம் செய்ய வைத்திருக்கின்றார். அதிக தண்டனை அனுபவித்திருக்கின்றனர். பிறகு பாபாவிடம் கேட்டார்கள், பாபா கூறினார்: சாட்சாத்காரம் செய்விக்கும் பொழுது கண்டிப்பாக பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இதனால் அவர் களுடைய முந்தைய பாவங்களின் கணக்கு வழக்குகள் குறைந்து போகும். பாபா யாரையும் விட்டுவைப் பதில்லை. எனவே பாபா சொல்கிறார் இழிவானவனாக அதாவது துரியோதன் ஆகாதீர்கள். கம்சன், ஜராசந்தி, சிசுபாலன் என்றெல்லாம் எத்தனையோ பெயர் சொல்லப் பட்டுள்ளது. கம்சன் என்பவன் விகாரியாக இருப்பவன், கன்னியர்களை மிகவும் இம்சை செய்பவன்.

இப்பொழுது நீங்கள் பாபாவின் குழந்தைகள் தேவதை ஆவதற்காக பிராமணர் ஆகியுள்ளீர்கள். எனவே பிராமண குலத்திற்கு களங்கம் ஏற்படுத்த வேண்டாம். களங்கம் ஏற்படுத்தினால் களங்கமுடையவர் ஆவீர்கள். குலத்திற்கு களங்கம் செய்தவரின் முகத்தைக் கூட பார்க்கக் கூடாது. அவரைப் போன்ற பாவ 3ஆத்மா உலகில் யாருமில்லை. இங்கு எல்லையில்லாத தந்தை வந்து சொர்க்கத்தின் மாலிக்காக (எஜமான்) மாற்றுகிறார். அவரையே ரத்து (மண முறிவு) செய்து விடுகிறார்கள். அவர்களை அஜாமில் போன்ற பாவி என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட அஜாமில் போன்ற பாவிகளுக்கும்

விமோசனம் ஏற்படத் தான் வேண்டும். தண்டனை அனுபவித்து மிகவும் துன்பப் படுவார்கள். ஆத்மாக்களுக்கு மிக அதிகமான துக்கம் ஏற்படும். பரமபிதா பரமாத்மா எல்லை யில்லா தந்தையை விட்டு செல் கிறார்கள். அவர்களைப் போன்ற பாவ ஆத்மா இவ்வுலகில் வேறு யாரும் இருக்க மாட்டார்கள். உலகம் மிகவும் மோசமாக உள்ளது. மிகவும் கவனமாக இருக்க வேண்டும். முதன் முதலில் பட்டியில் இருந்தபொழுது தாய் தந்தைக்கு எவ்வளவு காப்பாற்ற வேண்டியிருந்தது. மாயை மிகவும் கடுமையானது. எனவே பாபா கேட்கின்றார்: குழந்தைகளே! தூய்மையாயிருந்து தந்தையிடம் ஆஸ்தி பெறுமளவிற்கு சக்தி உள்ளதா? புத்தி சொல்கிறது - பாபாவின் குழந்தை யான பிறகு பாபாவின் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்து வோமா என்ன? பாபா சொல்கிறார் நான் வந்து குழந்தைகளாகிய உங்களை தூய்மையாக்க எவ்வளவு முயற்சி செய்கிறேன். தூய்மை இல்லாத உடலில், தூய்மை இல்லாத உலகில் வருகின்றேன். இருந்தும் களங்கம் ஏற்படுத்தினால் நினைவில் வையுங்கள்; மிக கடுமையான தண்டனை அடைய நேரிடும். இங்கு பிராப்தி (பலன்) அதிகம் உள்ளது. சொர்க்கத்தில் எஜமான் ஆகின்றீர்கள். ஆனால் போகப்போக பாபாவின் கையை விட்டு விடுவதால் முற்றிலும் மண்ணோடு மண்ணாகி போவீர்கள். எதிரில் இருப்பவரையும் மாயை மூக்கை பிடித்து விடுகிறது. எனவே மிகவும் எச்சரிக்கையாக இருக்கவும். பாபா குழந்தையாகி, உறுதிமொழி செய்து பிறகு தூய்மையாக இல்லையென்றால் மிக கடுமையான தண்டனை அடைய நேரிடும். ஈஸ்வரனுக்கு கொடுத்த வாக்கை முழுமை யாகக் காப்பாற்ற வேண்டும். ஈஸ்வரனுக்கு வாக்கு கொடுப்பது என்ற விசயம் இப்போது தான் நடைபெறுகிறது. சிவபாபா சொல்கிறார் உறுதி மொழி கொடுங்கள். நாங்கள் தூய்மையாக மாறி பாரதத்தை சொர்க்கமாக மாற்றுவோம். அப்படி செய்த உறுதி மொழியை மீறினால் அழிந்தே போவீர்கள். பூமியே பிளந்தாலும் தர்மத்தை (தாரணையை) விடக்கூடாது. இறந்தே போனாலும் சரி உறுதி மொழியை மீறிவிடக் கூடாது. சொன்ன சொல் பிறகு மாறிப்போகிறது அல்லவா? இப்போது நீங்கள் பரமபிதா பரமாத்மாவிற்கு வாக்குக் கொடுக்கின்றீர்கள். அப்படி சொன்ன சொல் (வாக்கு) மீறினால் தர்மராஜா மூலமாக தண்டனை அதிகம் அடைய நேரிடும். பலன் தருபவர் தந்தை தானல்லவா? தானம்- புண்ணியத் திற்கான பலனும் தருகிறார். அதே போல பாவத்திற்கான தண்டனையும் தருகிறார். செய்பவர் செய்ய வைப்பவர் அவர் தான். எனவே நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இங்கே நீங்கள் எதிரில் அமர்ந்துள்ளீர்கள். வெளி உலகில் அன்னங்கள் கொக்குடன் இருக்க வேண்டியுள்ளது. பாபா சொல்கிறார் இல்லறத் திலிருந்து கொண்டே மாமா, சித்தப்பா, பெரியப்பா இவர்களைப் பார்த்தாலும் ஒரு பாபாவை மட்டுமே நினைவு செய்யுங்கள். இது உலகில் உள்ளது போல பொதுவான சத்சங்கம் அல்ல. அங்கே அனேகர் சென்று அமருவார்கள். அந்த கிறிஸ்தவர்கள் ஒரு சொற்பொழிவிலேயே எத்தனை பேரை கிறிஸ்தவர்களாக மாற்றி விடுகின்றார்கள். இங்கு அப்படியிருக்க முடியாது. இங்கு உயிரோடு வாழ்ந்து கொண்டே இறக்க வேண்டும். ஸ்ரீமத்படி நடக்க வேண்டும். தேகா பிமானம் விட்டு தன்னை ஆத்மா என புரிந்து கொள்ள வேண்டும். ஆத்மா - பரமாத்மா வெகு காலமாக பிரிந்திருந்தனர். இப்பொழுது அந்த சத்குரு தரகர் ரூபத்தில் கிடைத்துள்ளார். சொல்கிறார் தந்தையாகிய என்னை நினைவு செய்தால் உங்கள் படகு கரை சேரும். கையை விட்டால் அழிந்து விடுவீர்கள். மகா பாவ ஆத்மா ஆகிவிடுவீர்கள். அப்படிப்பட்ட மகா பாவாத்மாவையும் பார்க்க வேண்டுமானால் இங்கே பாருங்கள், பாபா சொல்கிறார் குழந்தை களாகிய

நீங்கள் அப்படி தூய்மை அற்றவர் ஆகாதீர் கள். புண்ணிய ஆத்மா ஆகுங்கள். யோகத்தில் இருந்தால் தான் பாவங்களிலிருந்து தப்பித்து இருப்பீர்கள். குத்துச் சண்டையில் கவனம் தேவை. இல்லை யெனில் மாயை சிலசமயம் முதுகில் குத்திவிடும். மாயையை வெல்வது சித்தி வீடு அல்ல. இது சதோபிரதான சன்னியாசம். குழந்தைகளாகிய நீங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வேறு வழியில் சென்றால் இறந்து போவீர்கள். பாபாவிற்கு எழுதுகிறார்கள். பாபா மாயாவிடம் சொல்லுங்கள் எங்கள் மீது கருணைக் காட்டும்படி, பாபா சொல்கிறார் இல்லை இப்பொழுது மாயாவிற்கு நான் கட்டளை இடுகிறேன். இன்னும் அதிகமாக புயலை வீசு என்று, துக்கம், விகர்மம் என்ற மலையை தள்ளிவிடு. நன்றாக மூக்கைப் பிடித்து மூர்ச்சித்து விழ செய்து சொர்க்கத்திற்கு தகுதியானவரா என்று பார்? மாறாக கருணை செய், ஆசீர்வாதம் செய் என்று சொல்ல மாட்டேன்? பள்ளியில் ஆசிரியர் யார் மீதாவது கருணை காட்டுவாரா என்ன? அவர்கள் தான் படிக்க வேண்டும். இது ஞானம், கண் மூடித்தனமான பழக்கம் கிடையாது. இது பொதுவான சத்சங்கம் அல்ல. இது ஈஸ்வரிய சத்சங்கம். நல்லது.

தாய் தந்தையாகிய பாப்தாதாவின் இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, வரிசைக்கிரமமாக முயற்சியின் படி அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. தந்தையிடம் செய்த உறுதிமொழியில் நிலையாக இருக்க வேண்டும். ஒருபோதும் கொடுத்த வாக்கை மீறக்கூடாது. மிக மிக கவனமாக இருக்கவும்.

2. தனக்கும் பிறருக்கும் ஞான அலங்காரம் செய்ய வேண்டும். ஒருபோதும் தேக அபிமானி ஆகி தேகத்தில் சிக்கிக் கொள்ள வேண்டாம். பிறரையும் சிக்க வைக்க வேண்டாம்.

வரதானம் : ஒவ்வொரு ஆத்மாவிற்கும் நொடியில் முக்தி, ஜீவன் முக்தியினுடைய அதிகாரத்தை வழங்கக் கூடிய மாஸ்டர் சத்குரு ஆகுக.

இப்பொழுது வரை மாஸ்டர் வள்ளல் மற்றும் மாஸ்டர் டீச்சர் என்ற நடிப்பு நடித்துக் கொண்டு இருக்கின்றீர்கள். ஆனால், இப்பொழுது சத்குருவின் குழந்தையாகி கதி மற்றும் சத்கதியின் வரத்தை வழங்கும் வள்ளல் என்ற நடிப்பை நடிக்க வேண்டும். மாஸ்டர் சத்குரு என்றால் முழுமையாகப் பின்பற்றக் கூடியவர்கள், சத்குருவின் வார்த்தையின் படி சதா முழுமையாக நடக்கக்கூடியவர்கள். அப்படிப்பட்ட மாஸ்டர் சத்குரு தான் நொடியில் பார்வையின் மூலம் விடுவிக்கக்கூடிய அதாவது முக்தி, ஜீவன்முக்தியினுடைய அதிகாரத்தைக் கொடுக்கக் கூடிய சேவை செய்ய முடியும்.

சுலோகன்: கட்டளைப்படி நடப்பவர் ஆகுங்கள், அப்பொழுது பாப்தாதாவினுடைய உள்ளத்தின் ஆசீர்வாதங்கள் கிடைத்துக் கொண்டே இருக்கும்.